இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 141 இதழ் : 12 திகதி: 09.07.2017 விலை : 20.00

## ஆன்மீக, சமூக எழுச்சியூட்டிய பொது நிலையினர் கழக மாநாடு




என யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தற்காலப் பிறழ்வுகளை வெகு துல்லியமாக வெளிப் படுத் தியுள்ளார்.

யாழ். மறைமாவட்டப் பொது நிலையினர் கழகத்தின் வருடாந்த மாநாடு கடந்த 25. 06.2017 அன்று வெகு சிறப்பாகப் பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். ஆயர் இந்தக் கசப்பான உண்மையினை எடுத்துரைத்தார்.

குடும்ப உறவுகளுடன் முகம்முகமாகப் பேசுவதை, அன்பை அறிவை, அனுபவத்தைப் பகிர்வதை ஒன்றாக அமர்ந்து உணவருந்துவதை, கூட்டு இறை வழிபாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து இலத்திரனியல் சாதனங்களுடன் தனியே பேசி, சிரித்து நீண்டநேரம் அதனுள் மூழ்குவதும், போதைப்பொருள் பாவனை மற்றும் கலாசார சீரழிவுகளின் பின்னே அள்ளுண்டு போவதும் இன்றைய இளைய சமுதாயத்தின் எதிர்கால வாழ்வுக்கு ஆரோக்கியமானதல்ல

யாழ். மறை மாவட்டத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, இளவாலை, பருத்தித்துறை,

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான உத்திகளை விளையாட்டு மைதானத்தில் கற்றுக்கொள்வார்கள்

### யாழ். கத்தோலிக்க இளையோர் ஒன்றிய விளையாட்டு விழாவில் யாழ். ஆயர்

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினரால் நடாத்தப்பட்ட இளையோர் மன்றங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் மறைமாவட்ட நிகழ்வுகள் கடந்த 26.06.2017 அன்று நாவாந்துறை தூய நீக்கிலார் விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

யாழ். மறைமாவட்டத்தின் ஆறு மறைக்கோட்டங்களிலும் இருந்து வருகை தந்த இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற அணிகள் களமிறங்கின. ஆண்களுக்கான துடுப்பாட்டம், பெண்களுக்கான கிளித்தட்டு, ஆண், பெண்களுக்கான கயிறு இழுத்தல் எனும் நான்கு போட்டி களிலும் பங்குபற்ற வருகை தந்த 40 வரையிலான அணிகளும் அவர்களின் ஆதரவாளர்களுமாக ஐநூறுக்கும் மேற்பட்ட இளையோர் மைதானத்தை நிறைத்திருந்தனர்.

காலை 9.15 மணிக்கு வருகை தந்த யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களும்,

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## வெள்ளிவிழா நாயகர்களை வாழ்த்தி மகிழ்கின்றோம்





யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி S.J.Q.ஜெயரஞ்சன் அடிகளாரும் அருட்பணி K.ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளாரும் தமது குருத்துவ வாழ்வின் வெள்ளி விழாவை இம்மாதம் 28.07. 2017 அன்று கொண்டாடவுள்ளனர்.

அருட்பணி ஜெயரஞ்சன் அடிகளார் மானிப்பாய்ப் பங்குத்தந்தையாகவும், அருட்பணி ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபராகவும் பணியாற்றி வருகின்றனர். இவ்விரு குருக்களும் தமது பணிவாழ்வில் பொதுநிலை இளையோரையும் குருமட மாணவர்களையும் கல்விசார் உருவாக்கத்தில் உரமூட்டி வருகின்றனர். வெள்ளிவிழா நாயகர்களை பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## 'அம்மா உந்தன் சேனையிலே' இறுவட்டு வெளியீடு



யாழ். மறைமாவட்ட மரியாயின் சேனையினரின் தயாரிப்பில் உருவான "அம்மா உந்தன் சேனையிலே" என்ற இறுவட்டு 26.06.2017 அன்று காலை கலைத்தூது கலையகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ் மாவட்ட மரியாயின் சேனையின் தலைவர் ஆசிரியர் கருணைநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராகவும், குருமுதல்வர் அருட்திரு. P.J.ஜெபரெட்ணம் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விருந்தினர்களின் உரைகளுடன் வெளியீட்டுரையை யாழ்.மறைமாவட்டமரியாயின்சேனை ஆன்மீக இயக்குநர் அருட்பணி ம.றெஜி இராஜேஸ்வரன் அவர்கள் நிகழ்த்த இறுவட்டினை ஆயர் அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

சொலமன் சிறில் அவர்கள் அதன் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். ஆய்வுரையினைஆசிரியர் இ.ஜெயக்காந்தன் அவர்கள் நிகழ்த்தினார். ஏற்புரையினை அருட்திரு ஜோர்ஜ் அடி களார் நிகழ்த்தினார்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## யாழ். மறைமாவட்டக் குருக்களின் புதிய நியமனங்கள்

யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் மறைமாவட்டத்தின் சில பங்குகளுக்கும் நிறுவனங்களுக்கும் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவையாவன:

| | |
|---|---|
| அருட்பணி G.அருள்நேசன் | பங்குத்தந்தை தாழையடி, |
| அருட்பணி E. செபஸ்ரியன் | பங்குத்தந்தை புலோப்பளை |
| அருட்பணி A. றெனால்ட் ஜோர்ஜ் | பங்குத்தந்தை பரந்தன் |
| அருட்பணி எமில் இராஜேஸ்வரன் போல் | பங்குத்தந்தை - நெடுந்தீவு |
| அருட்பணி M.M.H.ஞானேந்திரன் | சவேரியார் குருத்துவக் கல்லூரி கொழும்புத்துறை |
| அருட்பணி A.அன்ரன் ஸ்ரீபன் | இயக்குநர் சமூகத் தொடர்பு, இளையோர் ஆணைக்குழு |
| அருட்பணி A.V.சில்வெஸ்ரர்தாஸ் | பங்குத்தந்தை தர்மபுரம் |
| அருட்பணி A.மைக் டொனால்ட் | பங்குத்தந்தை கட்டைக்காடு |
| அருட்பணி F.டினேசன் | உதவிப் பங்குத்தந்தை அச்சுவேலி, வளலாய் |
| அருட்பணி A.அன்ரோ டெனீசியஸ் | பதுளை மறைமாவட்டம் |
| அருட்பணி N.எரோனியஸ் | உதவிப் பங்குத்தந்தை நெடுந்தீவு |
| அருட்பணி R.O.ரெரன்ஸ் | உதவிப் பங்குத்தந்தை யாழ். மரியன்னை பேராலயம் |
| அருட்பணி A.அன்ரன் துஸ்யந்தன் | புனித பத்திரிசியார் கல்லூரி |
| அருட்பணி M.T.அலோய் அருனேஸ்குமார் | உதவிப் பங்குத்தந்தை ஊர்காவற்றுறை |

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

## எமது எண்ணம்

### சிங்களம் அல்லாத ஏனைய சமூகங்கள் எங்கே போவது?

1920 இல் இனப்பிரச்சினை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் பௌத்த குருமாரின் ஆதிக்கம் இலங்கை அரசியலில் கூடுதலாகவுள்ளது. பௌத்த சமயத்துக்கு அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் அதன் வெளிப்பாடாகும்.

முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னரான நிலையிலும் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு ஜனாதிபதியும் பிரதமரும் பௌத்தபிக்குகளின் ஆசியைப் பெறுகின்றனர். அது அவர்களுடைய சமயப்பண்பு.

ஆனால் பௌத்த பிக்குகளிடம் ஆலோசனையைப் பெற்று ஆட்சி நடத்துவது அல்லது பௌத்த குருமாரைத் திருப்திப்படுத்தி ஆட்சிபுரிவது ஏனைய சமூகங்களின் அரசியல் பொருளாதார, கலாசார உரிமைகளின் நிலைமை பற்றிய அச்சம் ஒன்றை வெளிப்படுத்தியுள்ளது. 2015 இல் நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்ற காலம் முதல் பிக்குமாரின் கருத்து வெளிப்பாடுகள் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியிருந்தன.

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியை மாற்றி நல்லாட்சி அரசாங்கத்தைக் கொண்டு வந்ததில் அனைவருக்கும் பெரும் பங்குண்டு. ஆனாலும் நல்லாட்சி அரசாங்கமும் எங்களை ஏமாற்றும் என்று தான் வடக்குக் கிழக்குத் தமிழர்களில் பெரும்பான்மையோர் கருதினர். இருந்தாலும் விரும்பியோ விரும்பாமலோ சில நம்பிக்கை அடிப்படையில் மக்களில் கணிசமான பகுதியினர் வாக்களித்தனர்.

ஆனால் இரண்டு ஆண்டுகள் சென்ற பின்னரும் கூட மாற்றங்கள் எதனையும் காணமுடியவில்லை. புதிய அரசியல் யாப்பின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வரும் என்று சொன்னார்கள். ஆனால் அந்த யாப்பிலும் இனப்பிரச்சினைத் தீர்வுபற்றிய விடயங்கள் எதுவும் இல்லையெனக் கூறப்பட்டது. இருந்தாலும் தமிழரசுக் கட்சியின் மூத்தசட்டவல்லுநர்கள் சிலர் இந்தப் புதிய யாப்பின் மூலமாகக் குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கம் ஏற்படும் என நம்பிக்கை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் புதிய அரசியல் யாப்பு தேவையில்லை என்றும் திருத்தங்கள் கூடச் செய்யப்படவேண்டிய அவசியம் இல்லையெனவும் மாநாயக்க தேரர்கள் கூறியுள்ளனர். ஆகவே மாநாயக்க தேரர்கள் கூறியது அவர்களின் கருத்தா அல்லது அரசாங்கம் அவர்கள் மூலமாக எங்களுக்குச் சொல்லி அனுப்பிய செய்தியா? பொதுவாகவே மாநாயக்க தேரர்கள் சொன்னால் அதனை அரசாங்கம் கேட்கவேண்டும் என்ற எழுதப்படாத சட்டம் ஒன்றும் உள்ளது.

இலங்கையின் வரலாறும் அதுதான். இந்த நிலையில் 70 ஆண்டுகால அரசியல் உரிமைப் போராட்டம் நடத்திய சமூகம் ஒன்றின் நிலைமை என்ன? கத்தோலிக்க திருச்சபை இனப்பிரச்சினை நீதியான முறையில் தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்தி வருகின்றது. வடக்குக்கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமையுடன் கூடிய கூட்டாச்சி ஒன்று தான் சரியான தீர்வு என்பது பொதுவான நிலைப்பாடு. இந்த நிலையில் மாநாயக்க தேரர்களின்மேற்படிகருத்தைஅரசாங்கம்ஏற்குமா? அப்படியானால் யுத்தத்தை அழிப்பதற்குக் காரணமாக இருந்த இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் நிலைப்பாடு என்ன? யுத்த அழிவுகளுடன் தமிழர்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளும் புதைக்கப்பட்டுள்ளதா என்பதை இந்தநாடுகள் பகிரங்கமாகக் கூற வேண்டும்.

அதிகாரப் பங்கீட்டைத்தான் தமிழர்கள் கோரினார்கள் அதிகாரப் பகிர்வையல்ல. ஆனால் எதுவுமே இல்லாத புதிய அரசியல் யாப்புக்கு இத்தனை எதிர்ப்பு என்றால் சிங்களம் அல்லாத ஏனைய சமூகங்கள் எங்கே போவது?

மாநாயக்க தேரர்களின் கருத்துச் சொல்லும் உரிமையை மறுக்க முடியாது. ஆனால் தேரர்களின் மேற்படிகருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் மக்கள் பிரதிநிதிகள் என்றுயாரும் பதவி வகிக்க வேண்டிய அவசியம் இல்லை?

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

## உலகில் இறையாட்சியின் விழுமியங்களை விதைக்க முன்வாருங்கள்

தீவக மறைக்கோட்டப் பொதுநிலையினர் கழகத்தினரின் திட்டமிடலுக்கான கூட்டம் கடந்த 01.07.2017 அன்று அல்லைப்பிட்டி வெண்புரவி நகரில் நடைபெற்றபோது உலகில் இறையாட்சியின் விழுமியங்களை விதைக்க முன் வாருங்கள் என யாழ். மறைமாவட்டப் பொது நிலையினர் கழக இயக்குனர் அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன் தெரிவித்தார்.

தீவகமறைக்கோட்டப்பொதுநிலையினர் கழகத்தின் இயக்குனராகப் பணியாற்றும் அருட்பணி S.M.P. ஆனந்தகுமார் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தீவக மறைக்கோட்டப் பங்குகளில் இருந்து பிரதிநிதிகளாக வருகை தந்த 30 இற்கும் அதிகமான பொதுநிலையினர் கலந்து கொண்டனர்.

பங்குகளில் அமைக்கப்பட வேண்டிய பொதுநிலையினர் விழிப்புணர்வுக் கழகங்களின் கடமைகள், மறைக்கோட்டப் பொதுநிலையினர் கழகத்தின் கடமைகள் என்பவற்றை விளக்கிய இயக்குனர், உலகில் வாழ்ந்தபடியே உலக ஒழுங்கை இறையாட்சிக்கெனப் புதுப்பிப்பதே பொதுநிலையினரின் சிறந்த அழைப்பு என விளக்கினார்.

தொடர்ந்து குழுக்களாகப் பிரிந்து எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் திட்டமிடப்பட்டன.

## "திருவழிபாட்டுக் கைநூல்" யாழ். மறைமாவட்டத் திருவழிபாட்டு ஆணையத்தினால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது

தற்போது எமது மறைமாவட்டத்தில் நடைமுறையிலிருக்கும் வழிபாட்டு முறைகளில் சில தவறுகளையும் தெளிவற்ற தன்மைகளையும், முரண்பட்ட வேண்டப்படாத, பொருத்தமற்ற செயற்பாடுகளையும் காணக்கூடியதாக உள்ளது.

இவற்றைக் கருத்திற்கொண்டு திருவழிபாடு பற்றிய தெளிவையும், ஒருங்கிணைந்த வழிபாட்டு முறைகளையும் முன்னெடுக்கும் நோக்குடன் இத் திருவழிபாட்டுக் கைநூலை அறிமுகம் செய்கின்றோம்.

திருவழிபாடு என்பது திருச்சபையின் பொதுக் கொண்டாட்டம். அது தனிநபரின் கொண்டாட்டம் அன்று (தி.வ.26)

எனவே ஒவ்வொருவரும் தத்தமது விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட முறையில் பொதுநலனைக் கருத்திற்கொண்டு திருவழிபாட்டை ஒருங்கிணைந்த செயற்பாடாகக் கொண்டாட முன்வரவேண்டும்.

எனவே திருவழிபாட்டுக் கைநூலில் குறிப்பிட்டுள்ள வழிபாட்டு ஒழுங்கு முறைகளை எமது யாழ். மறைமாவட்டத்தில் அனைத்து திருநிலையினரும், பொது நிலையினரும் அனைத்து ஆலயங்களிலும் சிற்றாலயங்களிலும் துறவற மடங்களிலும் நடைமுறைப்படுத்தவும் பின்பற்றவும் முன்வர வேண்டும்.

மேலும் இந்நூலில் உள்ள விடயங்களை ஆலய அருட்பணி சபையினர், வழிபாட்டுக் குழுவினர், பக்தி சபைகள் அறிந்திருப்பது ஆலய செயற்பாடுகளுக்குப் பயனுள்ளவையாக இருக்கும். இந் நூலை யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## இளையோருக்கான சமாதான நல்லிணக்கப் பயிற்சி முகாம்



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு இளைஞர்களுக்கான சமாதான நல்லிணக்க தலைமைத்துவப் பயிற்சி முகாம் மாமூலை முல்லைத்தீவு விளையாட்டு மைதானத்தில் 25.06.2017 அன்று பங்குத்தந்தை நிக்சன் கொலின் முள்ளியவளை பொலிஸ் உத்தியோகத்தர்கள், விருந்தினர்கள் தலைமையில் தீபாசுறை நிகழ்வுடன் ஆரம்பமாகியது.

இரண்டாம் நாள் நிகழ்வில் குழுக்குழுவாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு தலைமைத்துவ பயிற்சிகள் வளவாளர்களாக திரு.செ.ஜோசப் பாலா மற்றும் பாஸ்கரன் ஆகியோரினால் வழங்கப்பட்டது.

மேலும் கலாசார நிகழ்விற்கு அதிதிகளாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், அருட்தந்தை ஜோசப் பிரான்சிஸ் (இயக்குனர், கரித்தாஸ் கியூடெக்வன்னி). திருமதி. சறோஜா குகநேசதாசன் (தேசிய இளைஞர் மன்றம், உதவிப்பணிப்பாளர், முல்லைத்தீவு). மேலும் அருட்சகோதரி, மாமூலை - முள்ளியவளை - கோணாவில் - மாயவனூர் இளைஞர் குழு சர்வமத உறுப்பினர்கள், நல்லிணக்கக் குழுவினர், கரித்தாஸ் தேசிய இளைஞர் குழுச் செயலாளர் எனப் பலரும் கலந்துகொண்டதுடன், இந் நிகழ்வில் பங்குபற்றிய 80 இளைஞர்களுக்கான சான்றிதழ்கள் திரு.ஞா.கெனத் ராஜீவ்கரன் (சமாதான செயற்றிட்ட இணைப்பாளர், கரித்தாஸ் கியூடெக் வன்னி) தலைமையில் இடம்பெற்றது.

இறுதியாக கிளி/முல்லை சமாதான நல்லிணக்க நிகழ்விற்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு குலுக்கப்பட்டது. அதில் வெற்றிபெற்ற முதல் மூன்று பேரின் பெயர் விபரங்கள் பின்வருமாறு. 1) கிசோபா அம்பாள் குளம், கிளிநொச்சி (4276) 2) த னு ஜ ா கொழும்பு (8894) 3.சிவநிதி வற்றாப்பளை (11602).

## மதம் பிடித்த மதம்

மதம் பிடித்த யானை
தன் பாகனையே கொல்லும்
பாதையில் போகின்ற
பலரையும் தாக்கும்
பதம் சேர்க்கும் பாதையது
தங்களதே என்று சொல்லி
வதம் செய்து உயிரை எல்லாம்
பறிக்கின்ற காலம் இது...!
மதம் பிடித்த மதவாதம்
தொடர்கின்ற கொடுமையினால்
நித்தம் செத்து மடிகின்ற
ஆபிரிக்கக் கிறிஸ்தவர்கள்
சிலைகளைத் திருடச் சென்று
மசூதியை இடித்துத் தள்ளும்
நிலைமையில் நமது நாடும்
ஒன்றும் சளைத்ததல்ல
மன்னாரில் கிறிஸ்தவரை
கொன்றொழித்தான் யாழ் மன்னன்
அழிந்ததா கிறிஸ்தவம்?
ஓங்கி வளர்ந்ததன்றோ!
புனித யோசவ் வாஸை
பிழக்கத் திரிந்தாரே!
மறைந்து வாழ்ந்து
அவர் பரப்பி உயர்ந்தாரே!
இறைபதம் சேர்வதற்கு
உதவும் மதங்களெல்லாம்
உயர்ந்தவையே என மதித்து
வாழுவதே சிறப்பாகும்.

நவாலியூர் நாயகி

# பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிய குருக்களின் முதல் திருப்பலி.





இறைவனின் அருளால் பாஷையூர் புனிதஅந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த இரட்டைச் சகோதரர்கள் இருவர் மைசூர் ஆயர் மேதகு மு.ஆ.வில்லியம் ஆண்டகையினால் 28 யூன் 2017 குருக்களாகத்திருநிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் இருவரும் தமது முதல் திருப்பலியை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் எதிர்வரும் 09 யூலை 2017 காலை 6.15 மணிக்கு ஒப்புக்கொடுக்கவுள்ளனர். இவ் இரு புதியகுருக்களையும் வரவேற்று இவர்களது பணிக் குருத்துவ வாழ்வு சிறக்க எமது செபங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

இவர்கள் இருவரும் புனித வின் சென்டீபோல் துறவற சபையைச் சார்ந்தவர்கள். இச் சபை புனித வின்சென் டீ போல் என்பவரால் 1625 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் உருவாக்கப்பட்டது. இந்தியாவில் 1922 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அருட்பணி பசில் கிளைன் மற்றும் அருட்பணி மரியகிளைன் ஆகிய இரட்டைச் சகோதரர்கள் திரு. திருமதி. ஆ.அன்ரனி தம்பதியினரின் மகன்கள் ஆவார்கள். இவர்கள் உள்நாட்டு யுத்தம் காரணமாக இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்று அங்கு தமது கல்வியைத் தொடர்ந்தனர். அருட்பணி பசில் கிளைன் அடிகளார் 2004 ஆம் ஆண்டும். அருட்பணி மரிய கிளைன் அடிகளார் 2005 ம் ஆண்டும் இந்தியாவின் பெல்வாடிமைசூர் எனும் இடத்தில் உள்ள வின்சன் டி போல் குருமடத்தில் ஆரம்ப உருவாக்கம் பெற்றனர்.

இருவரும் தமது மெய்யியல் கல்வியை கோபால்பூரில் உள்ள அக்கியூனஸ் கல்லூரியிலும் அருட்பணி பசில் கிளைன். இறையியல் கல்வியை கேரளாவில் உள்ள பொன்ரிபிக்கல் நிறுவனத்திலும் அருட்பணி மரியகிளைன் புனேமகார்ாஸ்ரா மாநிலத்தில் உள்ள வித்தியாபீத் எனும் இடத்திலும் கற்றனர்.

இருவரும் திருத் தொண்டர்களாக 06 பங்குனி 2017 திருநிலைப்படுத்தப்பட்டனர். பின்னர் மைசூர் ஆயர் மேதகு மு.ஆ.வில்லியம் ஆண்டகையினால் 28 யூன் 2017 குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

# குறைகளைக் கூறி ஒதுங்கிவிட்டு அர்ப்பணவாழ்வை நிறைவுடன் பல நெருக்கீடுகளை எதிர்கொண்டு வாழ்ந்தவர் அருட்பணி சறத்ஜீவன்

அருட்பணி சறத்ஜீவன் நினைவுமலர் "ஜீவசாட்சி" வெளியீட்டில் யாழ் ஆயர்.




"தனது அர்ப்பண வாழ்வுக்கு நான் தகுதியுடையவனா எனத் தன்னை மீளாய்வு செய்து கொண்டதுடன், குறைகளைக்கூறிஒதுங்கிவிடாதுநிறைவுடன் பணிசெய்வதையும் எந்த நெருக்கீடான தருணத்திலும் இறை நம்பிக்கை தளராது வாழந்தவரான அருட்தந்தை சறத்ஜீவன் அடிகாளாரின் வாழ்வு முன்னுதாரணமானது" என சறத்ஜீவன் அடிகளாரின் நினைவுகளைப் பதிவாக்கிய "ஜீவசாட்சி" நூல் வெளியீட்டில் யாழ் ஆயர் மேதபு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

அருட்பணி கி.ஜோ. ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் ஆயர் தொடர்ந்து உரையாற்றுகையில் புனிதராகத் திருச்சபை அங்கீகரித்துக் கொள்வதற்கு முன் மக்களின் பணி வாழ்வால் மக்கள் ஏற்றுக்கொண்டவர்கள் மனங்களில் புனிதராக அங்கீகரிக்கப்படுவது அவர்கள் மறைவின்பின் உணரப்படுகின்றது.

அருட்பணியாளர்கள், உருத்திரபுரம் பங்குமக்கள், நல்லுள்ளங்களால் மண்டபம் நிறைந்த நூல் வெளியீட்டின் உரையை சென் ஜேம்ஸ் பங்குத் தந்தை அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன் அவர்களும் அனுபவப்பகிர்வினை அருட்பணி பாலதாஸ் பிராயன் அடிகளாரும் நன்றி உரையினை செல்வி நித்திலா மரியாம்பிள்ளை அவர்களும் வழங்க அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் வெளியிடப்பட்ட முதல் பிரதியை தலைவர் கி.ஜோ.ஜெயக்குமாரிடம் இருந்து யாழ் ஆயர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.



கரித்தாஸ் இத்தாலி அனுசரணையுடன், கரித்தாஸ் கியூடெக் வன்னி நிறுவனத்தினால் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் கல்வி கற்கும்352மாணவர்களுக்கு அவர்களின் கல்விச் செயற்பாடுகளைமேம்படுத்தும் வகையில் 23.06.2017 அன்று 261112 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணாங்களும் 393370 ரூபா பெறுமதியான பாதணிகளும் (சப்பாத்துகள்) வழங்கப்பட்டன.

# அன்னை திரேசா முதியோர் இல்லத் தரிசனை



யாழ். மறைமாவட்டத்தில் இறைபணியாற்றி வரும் கிளறேசியன் மிஷனரியினரின் (cmf) பொது நிலையினரால் 01.07.2017 சனியன்று அன்னை திரேசாமுதியோர்இல்லம் தரிசிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு (2016) இதே நாளில் கிளறேசியன் இல்லத்தில் அமைந்திருக்கும் புனித கிளாரட்டின் இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டின் நினைவாக இறை இரக்கத்தின் உருவப் படம் ஸ்தாபிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் கிளறேசியன் பொது நிலையினரால் இறை இரக்கத்தின் பக்தி நவநாள் செய்யப்பட்டு வந்தது.

01.07.2017 அன்று இப்பக்தி முயற்சியின் 1 ஆம் வருட நிறைவு நாளை நினைவுகூரும் வகையில் அருட்பணி றெக்ஸ் கொன்சன்றைன் (cmf) அவர்களால் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொது நிலையினரின் ஆன்ம இயக்குநர் அருட்பணி ஸ்ரீபன் சிங்கராயர் அடிகளாரின் வழிநடத்தலின் கீழ் கிளரேசியன் பொது நிலையினர் கோப்பாய் அன்னை திரேசா முதியோர் இல்லம் சென்று சிறுவழிபாடு செய்து சபையினரால் சேகரிக்கப்பட்ட அத்தியாவசிய அன்பளிப்புப் பொருட்களை அன்பளிப்புச் செய்தனர்.



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

### வடக்கு (யாழ்ப்பாண) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கும், தெற்கு (கொழும்பு) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்குமிடையே இருந்த எல்லை பிரிப்புப் பிரச்சினை.

**- அருட்பணி S.V.B.மங்களராஜா -**

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

இவர் 1854ம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி அங்கிருந்து செமேரியா அ.ம.தி அடிகளுடன் தெற்கு அப்போஸ்தலிக்க ஆட்சிப்பிரிவின் சார்பில் ஆயர் கேய்தானோ அந்தோனியோவுடனும் அவரின் பின் மரபுவழி ஆயர் நியமனம் பெற்ற பிராவியடிகளுடனும் கலந்து பேசவென கடல்வழி பயணித்து நீர்கொழும்பை வந்தடைந்தனர். ஆயர் பொணான்ட் அவர்களை செமேரியா அ.ம.தி அடிகள் தனியாகச் சந்தித்துக் கூடுதல் நேரம் இருவரும் உரையாடல் வைத்துக் கொள்ளும் சர்ந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதில் ஆயர் கெய்தானோ அந்தோனியோவும் அவரது மரபு வழி ஆயராக நியமனம் பெற்ற பிராவி ஆண்டகையும் கருத்தாயிருந்தனர்.

ஆயர் பொணான்ட்டுடன் எல்லை நிர்ணயம் சம்பந்தமாக இருதரப்பினரும் மேற்கொண்ட உரையாடல்களில்இருதரப்பினருக்கும் திருப்திகரமான எந்த முடிவுகளும் எட்டப்படவில்லை. யாழ்ப்பாண வடக்கு அப்போஸ்தலிக்க நிர்வாகப்பிரிவை இல்லாமற் செய்து முன்னர் இருந்தது போல முழு இலங்கையையும் திரும்பவும் ஒன்றாக்கி ஒரே அப்போஸ்தலிக்க முதல்வரின் கீழ் கொண்டு வரலாம் என்ற பரிந்துரை முதலாக முன்வைக்கப்பட்டது.

உரையாடல்களூடே செமேரியா அடிகளால் ஆயர் பொண்னான்ட்டுடன் சுதந்திரமாக எல்லா விடயங்களையும் பேசமுடியாதிருந்தது. எனவே இச்சிக்கலைத்தீர்க்கும் ஒரு திட்டமாக முன்னர் ஆயர் கொழும்பிலிருந்து இந்தியா செல்வது என்ற திட்டத்தை மாற்றி அவர் யாழ்ப்பாணம் வந்து ஊர்காவற்துறையிலிருந்து இந்தியா செல்லலாம் என்ற புதிய திட்டத்தை முன்வைத்தார். ஆயர் பொண்னான்ட்டும் அதற்குடன்பட்டு இருவரும் படகு மூலமாகத் திரும்பவும் யாழ்ப்பாணம் வந்தனர்.

வரும் வழியில் ஆயர் பொண்னான்ட் அவர்கள் வடக்குத் தெற்கு அப்போஸ்தலிக்க நிர்வாகப் பிரிவுகளின் எல்லை நிர்ணயம் சம்பந்தமாக ரோமாபுரிக்கு லத்தீன் மொழியில் ஒரு அறிக்கை தயாரித்து அனுப்புவதற்கு செமேரியா அடிகளின் உதவியை நாடினார். இந்தக் கோரிக்கை செமேரியா அடிகளுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்ததெனலாம். இவ்வாறாக மேற்படி எல்லை நிர்ணயம் சம்பந்தமான பல தகவல்கள் அடங்கிய கோப்புக்களை செமேரியா அடிகள் பார்க்கக் கூடியதாயிருந்தது. இதனால் செமேரியா அடிகள் தமது பக்கத்து வாதங்களை இன்னும் சிறப்பாக முன்வைக்கவும் தெற்கு அப்போஸ்தலிக்க நிர்வாகப்பிரிவினரின் வாதங்களுக்குப் பதிலளிக்கக் கூடிய எதிர்வாதங்களையும் முன்வைக்கக்கூடியதாயுமிருந்தது.

எல்லை நிர்ணயம் சம்பந்தமாக செமேரியா அடிகள் மீண்டும் கருதினால் பிரான்சோனி (Cardinal Franzoni) அவர்களைத் தொடர்பு கொண்டார். 1854ம் ஆண்டு ஜூன் 12ம் திகதி கருதினால் பிரான்சோனி எழுதிய கடிதத்தில் ஏற்கனவே கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்கள் தமது பொறுப்பில் உள்ள கத்தோலிக்கரை பராமரிக்கச் சிரமமாக உள்ளது என்ற நிலையிருக்கும் போது அவர்கள் எவ்வாறு இன்னும் மேலதிகமாக 12,000 கத்தோலிக்கரைப் பராமரிக்கப் போகிறார்கள் என்ற கேள்வியை செமேரியா அடிகள் எழுப்பினார். அடுத்த படியாக நீண்ட ஆய்வின் பின், தொடர்புள்ள எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து சீர்தூக்கிப்பார்த்த பின்னர் தான் தெற்கு, வடக்கு என்று இரண்டு அப்போஸ்தலிக்க நிர்வாகப்பிரிவுகளை (யாழ் அப்போஸ்தலிக்க நிர்வாகப் பிரிவை) இல்லாமல் செய்து மீண்டும் இலங்கை முழுவதையும் ஒரே அப்போஸ்தலிக்க நிர்வாகப் பிரிவாக்குவது திருச்சபையின் நலனுக்குப் பயன்தராத பின்விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன் சிலாபம் மறைத்தளத்தைப்பற்றியும் அங்குள்ள தலைவில்லு புனித அன்னாள் யாத்திரைத்தல காணிக்கைகள் பற்றியும் செமேரியா அடிகள் ஆயர் பொண்னான்ட் அவர்களுக்குக் கடிதம் மூலம் தெளிவு படுத்தினார். மேலும் கொழும்பு (தெற்கு) அப்போஸ்தலிக்க நிர்வாகப்பிரிவு யாழ்ப்பாண வடக்கு அப்போஸ்தலிக்க நிர்வாகப்பிரிவிலும்பார்க்க பொருளாதாரத்தில் வலுவானதொரு நிலையிலுள்ளமையையும் சுட்டிக்காட்டினார். இவ்வெல்லை நிர்ணய விவகாரத்திற்கு இறுதியில் 1855ம் ஆண்டு விசுவாசப்பரப்புதல் சபையினால் தீர்வு காணப்பட்டது. தீர்வின் விபரங்கள் பின்வருமாறு.

1) அரச நிர்வாக மாகாணங்களின் எல்லைகளின் அடிப்படையில் இரண்டு அப்போஸ்தலிக்க மாவட்டங்களும் பிரிக்கப்பட வேண்டும். தென் மாகாணம், தென்மேல் மாகாணம், மத்திய மாகாணம் ஆகியவற்றை உள்ளடக்கிய கிழக்கு மாகாணம், வடமேல் மாகாணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக வடக்கு அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டம் இருக்கும்.

2) வடக்கு (யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க முதல்வர் இவ்வெல்லை நிர்ணயம் அமுலுக்கு வரும் நாளிலிருந்து 5 வருடத்திற்கு தலைவில்லு புனித அன்னாள் திருத்தலத்திலிருந்து பெறப்படும் வரும் படியிலிருந்து தெற்கு (கொழும்பு) அப்போஸ்தலிக்க நிர்வாகப்பிரிவில் பணிபுரிந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு கோவா ஒரட்டோரின் சபைக் குருவுக்கும்ஒவ்வொருவருடமும்தலா 75 ரூபாய் வழங்கிவர வேண்டும்.

3) பம்பிபட்டம் (பம்பிவட்டன்), (சிலாபத்திற்கு அருகில் உள்ள இடம்), புத்தளம், மாம்புரி ஆகிய இடங்களில் உள்ள தோட்டங்கள் (தென்னந்தோட்டங்கள்) சில கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களால் உரிமை கொண்டாடப்பட்டு வந்தன. இவற்றின் உரிமையாளர்கள் இந்தக் குருக்களே என்று சந்தேகம் இன்றி தெரியுமிடத்து 1848ம் ஆண்டு இவற்றின் பெறுமதிப்படி இக்குருக்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறாக வடக்குத் தெற்கு அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டங்கள் மத்தியில் தீர்க்கப்படாது இருந்த நீண்ட கால எல்லைப்பிணக்கிற்கு ஒரு தீர்வு காணப்பட்டது.

---

## யாழ். மறைமாவட்டத் திருச்சபைக்காக மன்றாடுவோம்

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

தனது பிள்ளைகளைப் பிக்குகளின் எதிர்ப்பின் மத்தியிலும் கத்தோலிக்கப் பாடசாலைகளில் விட்டுக் கல்வியூட்டிய பிரதமர் சிறிமாவோ பண்டார நாயகாவின் பாடசாலை சுவீகரிப்பின் பின்பு இன்றுவரை நல்லொழுக்கக் கட்டுப்பாடென்பது கேள்விக்குறிதான். மேலும் அக்காலத்தில்யாழ்ப்பாணம் தூய பத்திரிசியார் கல்லூரி, இளவாலை தூய கென்றியரசர் கல்லூரி, ஊர்காவற்துறை அந்தோனியார் கல்லூரி, வதிரி திரு இருதயக்கல்லூரி, முல்லைத்தீவு, தூய பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம், இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடமான வித்தியாலயங்கள் போன்ற கத்தோலிக்கப் பாடசாலைகளூடாகத் தேவ அழைத்தல்கள் வரத் தொடங்கியதோடு சுதேச குருக்கள் துறவியரும் அதேவேளை மறைமாவட்டக் குருக்கள் பலரும் உருவாகினர். முதல்சுதேச மறைமாவட்ட ஆயர் மேதகு ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ் பிள்ளை அமதி அவர்களுக்கு அப்போஸ்தலிக்க ஆட்சிப்பீடத்தால் மறைமாவட்டக் குருக்களை உருவாக்கும்படி கொடுக்கப்பட்ட பணிப்புரையை தானேயோர் அமதியாக இருந்து கொண்டு பல மறைமுக எதிர்ப்புகள் மத்தியிலும் அமதி குருமடமாக இருந்த மாட்டீனார் குருமடத்தை அருட்தந்தை ரி. ஜே. ஏ. மதுரநாயகம் அடிகளை அதிபராக்கி மறைமாவட்டக் குருமடமாக்கிச் செயற்படுத்தியதால் அவரைத் தொடர்ந்து வந்த மூன்று யாழ். மறைமாவட்ட ஆயர்களும் (ஆயர்கள் மேதகு பஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை, மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், மேதகு யஸ்ரின்பேனாட் ஞானப்பிரகாசம்) முன்னாள் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆயர்களும் (ஆயர்கள் மேதகு லியோ இராசேந்திரம் அன்ரனி, மேதகு கிங்ஸிலி சுவாம்பிள்ளை, மேதகு இராயப்பு யோசவ்) மறைமாவட்டக் குருக்களாகப் பணியாற்றியே ஆயர்களாக அபிஷேகம் பெற்றனர் என்பதை எண்ணும் போது இறைவன் எம்மைச் சிறப்பாக ஆசீர்வதித்திருக்கிறார் என்பதில் ஐயமேதுமில்லை. இரண்டாம் வத்திக்கான் சங்கப் பரிந்துரைகளோடு இல்லறத் தொண்டர்களை ஏற்படுத்தும் முகமாக எழுந்த நிரந்தர மறைப் போதகர்களின் உருவாக்கமும் அவர்களது ஏறக்குறைய அரை நூற்றாண்டு சேவையும் இளவாலை மற்றும் கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலைகள் உருவாக்கிய. கத்தோலிக்க ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சங்கச் செயற்பாடுகளும் பொதுநிலையினர் கழகச் சேவைகளும் அளப்பரியன. இக்கலாசாலைகளின் பலாலி மற்றும் கோப்பாய்க்கான இடப்பெயர்வு விட்டுச் சென்ற கொழும்புத்துறைக் கட்டடங்களை முன்யோசனையுடன் மீளப்பெற்று ஆயர் தியோகுப்பிள்ளை, அருட்தந்தை பிலிப் பொன்னையா அடிகளாரை முதல் அதிபராகக் கொண்டு உருவாக்கிய புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, சுதேச பண்பாட்டில் குருக்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

மேற்கூறப்பட்ட அருள்வரங்களையும் வளங்களையும் பின்னணியாக வைத்து எமது மக்களின் நம்பிக்கை வாழ்வின் அடியாழத்தை நோக்கும் போது கடந்த 1994இல்"புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக" என்னும் நோக்கில் கூட்டப்பட்ட மேய்ப்புப்பணி மாநாடு செயற்படுத்த விளைந்த அன்பிய வாழ்வு தொடர்பான தீர்மானங்களை சுனாமியும் போரும் முள்ளிவாய்க்கால் அவலத்தைத் தொடர்ந்த இல்லாமைகளும் இயலாமைகளும் எங்கோ இழுத்துக்கொண்டு போனாலும் கூட திருச்செபமாலையைக் கரத்தேந்தியவர்களாக இந்த நெருப்பாற்றை நீந்திக்கரை சேர்ந்த எம்மவர்களின் நம்பிக்கை உறுதிப்பாடு மீண்டும் ஒரு மாநாட்டை 2016இல் "புதிதாய் வாழ்வோம்" என்னும் நோக்கில் கூட்டச்செய்த தெனலாம்.

(தொடரும்...)

அருட்பணி .C.J.அன்ரனிபாலா

# உள்ளத்து அனையது உயர்வு

அருட்பணி.மா.ரேஜிஸ் இராசநாயகம்



“வெள்ளத்து அனையது மலர்நீட்டம் –
மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு” என்றார்
பொய்யா மொழிப்புலவர்.

**இரு பரிமாணங்கள்:**

அனைத்து முன்னேற்றங்களும் இரு பரிமாணங்கள் கொண்டவை. மனிதன் மனிதனாக வாழ்வதற்குப் பொருள் பயனுள்ளதென்றால் அது அவசியமானது. பொருள்தான் எல்லாம், அதுவே 'தெய்வம்' என்று எண்ணினால் அது அவனது தொலைநோக்கைத் தொலைத்து அவனை அடிமையாக்கிவிடும். இதன் விளைவாக மனங்கள் மரத்து, இதயங்கள் இறுகி அவன் தன் உறவுகளையும், நண்பர்களையும் தேடாது விடுகிறான். அப்படித் தேடினாலும் சுய தேவைக்கே தேடி அதன் விபரீத விளைவுகளைச் சந்திக்கிறான்.

**இரு சாராரும் விதிவிலக்கல்ல:**

இன்று பலர் மகிழ்ச்சியையே மறந்து, வேலை வேலை என்று அலைந்து திரிகின்றனர். இவர்கள் வாழ்வில் எது முக்கியம் என்பதை மறந்து சொத்துக்களைக் குவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயுள்ளனர். இந் நுகர்வுக் கலாசாரத்தின் ஈர்ப்புக்களுக்கு எவருமே விதிவிலக்கல்ல. எங்கள் திரு அவையிலும் திருநிலையினர், பொது நிலையினர் இரு சாராருக்கும் இவை பொருந்தும்.

**மனித முன்னேற்றம்:**

“பேராசையோடு சொத்தைத் தேடுதல் தனிமனிதனின் தன்நிறைவுக்கும் மனித மாண்புக்கும் பெரும் தடையாக அமையும். பேராசைதான் அறநெறி வளர்ச்சியின்மையின் தெளிவான காரணி” என்கிறது 'மனித முன்னேற்றம்' என்னும் சுற்றுமடல். செல்வம் என்னும் சொல்லே அது சென்றுவிடும் அல்லது நிலையற்றது என்பதையே சுட்டி நிற்கிறது.

**அறிவற்ற செல்வன்:**

நாம் சேர்த்துவைக்கும் பொருட்கள் அனைத்தையும் ஒருநாள் இழக்கவேண்டும். அறிவற்ற செல்வனின் உவமையில் (லூக்.12:16-20) இன்றைய மனிதனின் நுகர்வுக் கலாசாரத்தை இயேசு தெளிவாகக் காட்டுகிறார். இரவும் பகலும் அவனது சிந்தனை எவ்வாறு செல்வத்தைக் குவிக்கலாம், கட்டிக்காக்கலாம் என்பதே. ஆனால் கடவுள் அவனிடம் 'அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?' என்று கேட்டார் (லூக்.12:20). பலருடைய வாழ்வில் இவை இடம்பெறுவதை நாம் பார்த்தபின்பும் இவை எமக்குச் சுடலை ஞானமாகவே நின்றுவிடுகிறது. அதாவது அந்தக் கணத்தோடேயே நின்று விடுகின்றது.

**இரவில் செயலாற்ற முடியாது:**

நாம் செய்த நன்மை தீமைகளே நம்மைப் பின்தொடர்பவை. “ஆம், அவர்கள் தம் உழைப்பிலிருந்து ஓய்வுபெறுவார்கள் ஏனெனில் அவர்களின் செயல் அவர்களைப் பின் தொடரும்” (திருவெளி 14:13). நிலைவாழ்வுக்குரிய சொத்தைச் சேகரிக்கும் சந்தர்ப்பம் இறப்போடு முடிந்துவிடும். “பகலாய் இருக்கும்வரை என்னை அனுப்பியவரின் செயலை நாம் செய்ய வேண்டியிருக்கிறது. இரவு வருகிறது அப்போது யாரும் செயலாற்ற இயலாது” (யோவான்.9:4). இறக்கும் நேரத்தில் நன்மையையோ தீமையையோ, இறையன்பையோ இறை இரக்கத்தை நிராகரிப்பதையோ முடிந்த முடிவாக நாம் தீர்மானிக்கிறோம். இப்படியாக எண்ணம் மோட்சமும் நரகமும் முடிவற்றவை என்பதை நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

**இறுதி வார்த்தைகள்:**

இறக்கும் ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரனின் இறுதி வார்த்தைகள்:

“உலக வர்த்தகத்தின் உச்ச நிலையை அடைந்தேன். அனைவரின் பார்வையில் நான் வெற்றியின் இலக்கணம். என் வாழ்வில் இருந்ததோ நிறைந்த வேலை அற்ப மகிழ்ச்சி. மரணம்என்னை அண்மித்தபோது, நோயுற்று நான் படுத்திருந்து என் வாழ்வை மீள்நோக்கினேன். பெருமையென நான் நினைத்த என் பெயரும் பொருளும் மங்கி அர்த்தமற்றவையாகத் தோன்றின. பணத்தை மட்டுமே வாழ்வில் குவித்த அதேவேளை வேறு முக்கியமானவைகளைக் கைநெகிழ்ந்து விட்டேன் என்பதை உணருகிறேன்.

உறவுகளையும், வாழ்வின் ஏனைய விழுமியங்களையும் நான் தேடியிருக்கவேண்டும்”. சொத்துக்களின் தொடர்தேடல் ஒருவரின் தொலைநோக்கையே தொலைத்துவிடும். ஆழமாக அன்பு செய்யும் இதயத்தை இறைவன் தந்தார். ஏன்? என் வாழ்வின் இறுதியில் என்னுடன் கூட வருவது என் அன்புச் செயல்களைத் தவிர வேறு எவை? “அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்”. இவர் யாரோ?

இழந்தவற்றில் எதையும் மீளப்பெற்றுக்கொள்ளலாம். ஆனால் வாழ்வை....? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம். இறப்பின்போது இவ் இறுதி வார்த்தைகளை உதிர்த்த உதடுகள் யாருடையவை என்று வியக்கிறீர்களா? இவர் ஒரு மறைபோதகரோ மெய்யியலாளரோ அல்லது ஆன்மீகவாதியோ அல்ல. Macintosh கணனி, Apple கணனி, i Phone, i Pad, i Pod என்பவற்றைக் கண்டு பிடித்த கோடீஸ்வரர் ஸ்ரீவ் ஜோப்ஸ். இவரது வார்த்தைகள் வாசகர் உள்ளங்களை ஊடறுத்தும் செல்லுகின்றனவல்லவா? அன்பை அடித்தளமாகக் கொண்ட ஆன்மீகம் இல்லாமல் வெறும் உலக செல்வம் எம்மைப் பின்தொடருமோ?

இவற்றையே இன்றைய திருத்தந்தை கூறும்போது: “வாழ்வில் நிலைக்கும் விழுமியங்கள் இறைவனும் அயலவருமே. இறைவனை நேசிப்பதும் தேவையில் உழல்வோருக்கு உதவுவதுமே ஆன்மீக செல்வத்தைத் தேடும் வழிகள்” என்றார். இவற்றைத் தேடினால் நாம் கண்களை மூடும்போது கடவுள்முன் வெறுங்கையராக நிற்கமாட்டோம்.

“வெள்ளத்து அனையது மலர்நீட்டம் –
மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு”

மனத் தூய்மையோடு வாழ்வுக்குத் தேடவேண்டியவற்றைத் தேடும்போது உள்ளம் உயரும், வாழ்வும் உயரும். அன்றேல் நுகர்வுக் கலாசாரத்துள் மூழ்கி மடிய வேண்டிவரும்.

# ஒலியையும் நிறுத்தி வைக்கும் பாசம்




60 ஆண்டுகளுக்கு முன், ஒரு கிராமத்தில் நடந்த சம்பவம் இது. எட்டு வயதான அந்த சிறுவனுக்குத் தாய்தான் எல்லாம். தந்தை அயல் ஊருக்குக் கட்டட வேலைக்குச் சென்று, அவ்வப்போது வருவதுண்டு. 6 மாதங்களுக்கு ஒருமுறை வந்தாலும், ஓரிரு நாட்களில் புறப்பட்டு விடுவார்.

அந்த வீட்டில் பொழுதுபோக்கிற்கென இருந்தது, ஒரு பழைய காலத்து வானொலிப் பெட்டிதான். அந்த வானொலியில் ஒலிபரப்பாகும் ஒரு குறிப்பிட்ட பாட்டை மட்டும்தான் அவனின் அம்மா விரும்பிக் கேட்பாள். அந்தப் பாட்டைக் கேட்கும்போதெல்லாம், அச்சிறுவனின் அம்மாவின் அம்மா, அதாவது, இவன் பாட்டி அவன் தாய்க்கு ஞாபகத்தில் வருவாராம். கடந்த வாரம்தான் அப்பாவும் வந்துவிட்டுச் சென்றிருந்தார். அவருக்கும் சரியான வேலை இல்லை. அம்மாவிடமும் காசில்லை. தினசரி வயல் வேலையில் கிடைக்கும்பணம் வீட்டுச்செலவுக்கே போதுமானதாக இல்லை. மாலையில் சிறுவன் வழக்கம் போல் வானொலி கேட்டுக் கொண்டிருந்தான். திடீரென அவன் அம்மாவுக்குப் பிடித்த அந்தப் பாடல் ஒலிபரப்பாகியது. 'ஐயோ, அம்மா இன்னும் வரவில்லையே' என வருத்தமடைந்த சிறுவன், வானொலியை உடனே அணைத்து விட்டான். அம்மா வரும்வரை காத்திருந்த சிறுவன், தன் தாய் வந்ததும் வராததுமாக, வானொலிப் பக்கம் அழைத்துச் சென்று, வானொலியை இயக்கினான். 'இதோ கேளுங்கள், நீங்கள் விரும்பும் பாட்டை' என உரைத்தான்.

ஆனால் அங்கோ, வேறு நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. 'நீங்கள் கேட்க வேண்டும் என்பதற்காக, நான்கூடக் கேட்காமல் அணைத்து வைத்திருந்தேன். எப்படி மறைந்தது' என்று அப்பாவியாகக் கேட்டான் மகன். தன் மகனின் பாசத்தை எண்ணி மகிழ்ந்த தாய் அவனை உச்சி முகர்ந்து, முத்தம் கொடுத்தார். மகன் நிறுத்தி வைத்த பாடல், அத்தாய்க்கு, எங்கோ தூரத்தில் கேட்பதுபோல் இருந்தது.

## மனித மாண்புடன்



அருட்சகோதரி. றோமலா அன்ரனி H.C

# இளமையும் வசந்தமும் சேர்ந்தால்

ஒவ்வொரு மனிதனும் தனது பிறப்பால் அர்த்தமுண்டு என்ற உண்மையை சுதந்தரித்துக் கொள்கிறான். இந்த ஆர்வம் நம் ஒவ்வொருவருடைய இரத்த நாளங்களிலும் இழையோட வேண்டும்.

சிறு பராயம் தொட்டு எமது பெற்றோர், பெரியோர், நண்பர்கள் நமக்கு ஊட்டிய அன்பு அரவணைப்பு, பரிவு, தியாக சிந்தை, பெருந்தன்மை ஆகிய தெய்வீகப் பண்புகள் நம்முடன் இணைந்து விடுகின்றன.

மனிதன் எப்படிப்பட்ட துன்பச் சூழலில் வாழ்ந்தாலும் அவனிடம் புதைந்து கிடக்கும் சக்திக்கு விலை மதிப்புமில்லை அச்சக்தி மங்கிவிடுவதுமில்லை என்பது உளவியலாளர்களின் சிந்தனை மனித வாழ்வில் இளமைப் பருவம் என்பது வசந்தகாலமாகும். இப்பருவத்தில் நம் உள்ளங்களின் இளமை ததும்பும் ஆசைகள், துடிப்புகள், எதிர்பார்ப்புகள், உணர்ச்சிகள் எல்லை காணாதவை. இப் பருவத்தில்தான் உளவளர்ச்சியில் 2/3 பங்கு முற்றாக உருவாகின்றது. நாம் காணும் இயற்கையானது தென்றலினாலும், மழைத்துளிகளினாலும் தன்னை மாறி மாறி இளமை படரச் செய்கின்றது. வசந்தகாலங்களும் சுழற்சிமுறையில் வந்து போகின்றன.

அதேபோல் எமது மனித சமூகத்திலும் வயது போனாலும் இளமை நிறைந்த மனம் இருப்பதால் வசந்தம் மறைவதில்லை. இளமை பசுமை மிக்க இனிதான பருவத்தையும் மனத்தையும் உடைய காலங்களாகும். இது ஆண் பெண் இரு பாலார்களிடமும் நிறைந்துள்ள நறுமணம் மிக்க உணர்ச்சியாகும். மனித உணர்ச்சியின் இயல்புகளும் இளமையும் ஒரு வரப்பிரசாதமாகும். இங்கு தான் காதல் என்ற எதிர்காலப் பூ மணம் வீச ஆரம் பித்து விடுகின்றது. இந்தக் காதலை ஒரு சிலர் அறிந்து, புரிந்து இன்புற்றுவாழ்வைச் சுவைக்கின்றனர் அத்துடன் ஒருவர் மற்றவருக்காகத் தியாகம் செய்யும் உறவு, நிலையும் மலர்கின்றது. ஆயினும் இந்தக் காதல் வலையில், சிக்கி வேதனைப்படுபவர்கள் பலர் தேர்ச்சி பெறுபவர்கள் சிலர். காதலில் இறங்குபவர்களெல்லாம் வெற்றி பெறுபவர்களல்ல. வெற்றி பெறுபவர்களெல்லாம் குடும்பவாழ்வை மகிழ்வாக நிறைவாக வாழ்பவர்களுமல்ல. இரு உள்ளங்களும் தமது ஒன்றிணைப்பையும், தியாக சிந்தையையும் கருத்திற்கொண்டு உணர்வுகளை மதித்து வாழ்ந்து வாழ்வின் மகிமையை அனுபவிக்க வேண்டும்.

நாம் வாழப்பிறந்தவர்கள் என்ற நம்பிக்கையுடன் ஒருவர் மற்றவரில் தங்கி வாழும் மன நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் எம் வாழ்வில் புதுத் திருப்பங்கள், புது வழிகள் உருவாவதுடன் எங்களுக்கும் நிகழ்காலமும் எதிர்காலமும் உண்டு என்ற மனத்துணிவுடன் வாழ்வினை எதிர்கொள்வோம்.

நமது உடல் வளர்ச்சியை விட மன வளர்ச்சியின் மூலம் என்றும் நாம் இளமையாக வாழலாம். இதற்கு எமது மனம் எம்மை ஆட்சி செய்ய வேண்டும். இந்த மனம் தான் ஒரு செயலை சரிவரச்செய்யவும், செழுமையான வாழ்க்கையை அனுபவிக்கவும் வழிகோலுகிறது எனவே எமது மனத்தை அடிப்படையாகக் கொண்டு நல்லது தீயது புரிந்து நடப்பின், எமக்குத் தோல்வியோ, ஏமாற்றமோ, விரக்தியோ ஏற்படப்போவதில்லை. நாம் எமது மனதைத் தூய்மையாகவும் தெளிவானதாகவும் திடமானதாகவும் அழகாகவும் வைத்திருப்பின் நாம் என்றும் அழகுடனும் சுறுசுறுப்பு மிக்க செயல்பாட்டுடனும் வாழலாம். இளம் பருவத்தை விட இளமையான மனம் என்றும் நமது நல்வாழ்விற்கு ஒளியூட்டும்.

மனிதன் இயற்கையாகவே நல்லவன். ஆனால் அவன் மனம் நாடி, நரம்பு என்பவற்றுக்குள்ளே அடங்கி வாழ்கின்றான். மனம் பண்பட்ட நெறியை நாடுகிறது. ஆனால் நாடி, நரம்புகள் பழக்க வழக்கங்களையே நாடுகின்றது. மனம் உண்மையையும் நன்மையையும் தேடுகின்றது. ஆனால் நாடி, நரம்புகள் சொகுசையும், களிப்பையும் தேடுகின்றது. ஆயினும் இவை இயங்க அவனது குடும்பமும், சூழ்நிலையும் அடிப்படையாக அமைகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு மனம் உண்டு. இந்த மனதினைப் பொறுத்து ஒவ்வொருவருக்கிடையிலுள்ள உளவியல் நடவடிக்கையும் வேறுபட்டதாக அமைகிறது. மனதினில் ஏற்படும் மாற்றம் பெரும்பாலும் உடலிலும் விளைவை ஏற்படுத்துகின்றது, இதனால் நாம் எடுக்கும் முடிவுகளை மீளவும் அலசி ஆராய்ந்து சரிபார்க்க வேண்டும்

இதனால் விட்டுக்கொடுக்கும் தன்மையும், குறை நிறைகளை ஏற்றுக்கொள்ளும் தன்மையும் கிடைக்க வாய்ப்புண்டு. ஏனெனில், மனிதன் மனம் சார்பாக ஒரு தனி உலகினைக் கொண்டவனாகக் காணப்படுகின்றான்.

இந்த ரீதியில் மனித குணங்களை ஆராய்ந்து மனித உணர்வுகளை மதிப்பவனே, மனித சாதனையை ஏற்றுக்கொள்ளக்கூடியவன் ஆகின்றான். அத்துடன் மனித குறைபாடுகளையும் அவனாலேயே அறிய முடிகின்றது.

மனிதன் தன் மனதினை எப்போதும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இதனால் சிந்தனையின் வேகம் அதிகமாக இருப்பதுடன் உற்சாகமாகவும் இருக்கமுடியும். ஒரு மனிதன் எல்லோரும் திருப்திப்படும் விதமாக வாழ முடியாது. தனக்கென்று ஒரு திட்டமான கொள்கையை வகுத்து அதனை வாழ்நாளில் கடைப்பிடிக்க முயற்சிப்பவன் என்றுமே மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

இளம் எழுத்தாளரான லஸ்டிக் கனல் தன்னுடைய முதல் கதை பிரசுரமானதும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். எழுதுவதையே தன்னுடைய தொழிலாகக் கொண்டார். இவர் தனக்குக் கிடைத்த வாய்ப்பை அலட்சியப்படுத்தியிருந்தால் பிரபல எழுத்தாளராக ஆகியிருக்க முடியாது.

வாய்ப்புகள் கிடைக்கும் பொழுது நாம் தான் அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமே தவிர, வாய்ப்புகள் தானே வந்து அமையாது. வெற்றியும் தோல்வியும் நம்மிடத்தில் தான் இருக்கிறது. ஒரு முறை சரியாக அமையாவிட்டால் மறுமுறை சரியாக அமைய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.


சில நிமிடத்தில் அமையும் வாய்ப்பினைப் பயன்படுத்தி கொண்டால் வாழ்வில் இன்பமலர்கள் பூத்துக் குலுங்கும்.

நாம் ஒவ்வொருவரும் படைப்பில் சிறப்பாக விளங்குகின்றோம். நம்மைப் போல நாம் ஒருவர் மட்டுமே இவ்வுலகில்மனிதனாக இருக்கமுடியும். எனவே நாம் நாமாக இருப்பதோடு நம்மிடம் உள்ள இயல்பான திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, பிறரைப்போல் நாம் இருக்க ஆசைப்படுவது முறையல்ல.

எம்மிடம் மறைந்து கிடக் கும் திறமை, இயற்கை எனக்கு மட்டுமே அளித்த வரப்பிரசாதம் ஆகும். அது என்ன என்பதை நானாக முயற்சி செய்து வெளியே கொண்டு வரவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தன்மை, குணம், திறமை, ஆற்றல், ஊக்கம், தோற்றம் என்பன இயற்கையால் அளிக்கப்பட்டவை.

நம்மை நாமே நன்றாக உணர்ந்து விட்டால் மற்றவர்களைப் பற்றியோ, அவர்களைப்போல் மாறவோ ஆசைப்பட அவசியமில்லை. நாமே நம்மில் திருப்தி காணவேண்டும். நம்மில் உள்ள மனம், புத்தி, ஆற்றல், திறமை, வாய்ப்புக்களைக் கொண்டு சரியாகத் திட்டமிட்டு செயற்பட்டால் என்றும் இளமைத் துடிப்புடன் இன்புற்று தனித்தன்மையுடன் வெற்றிபெறுவோம்.

# கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு விலகியிருப்பவர்களுக்காகச் செபம்



இயேசுக் கிறிஸ்துவே நம்மகிழ்வு என்பதையும், அவரின் அன்பு மாறாதது மற்றும் குறையாதது என்பதையும், நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு விலகியிருப்பவர்களுக்காகச் செபிப்போம் என்ற தலைப்பில், தனது ஜூலை மாதச் செபக்கருத்துப் பற்றி, காணொளி வழியாகப் பேசியுள்ள திருத்தந்தை, ஒரு கிறிஸ்தவர், கவலையாக இருக்கின்றார் என்றால், அவர், இயேசுவிடமிருந்து விலகியிருக்கின்றார் என்று அர்த்தம் எனக்கூறியுள்ளார்.

ஆயினும், கிறிஸ்துவை விட்டு விலகியிருப்பவர்களை நாம் கைவிடக்கூடாது என்றும், நம்சொற்கள், இன்னும், சிறப்பாக, நம் மகிழ்வான சாட்சிய வாழ்வு மற்றும், நம் சுதந்திரத்தோடு, கிறிஸ்தவ நம்பிக்கையை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு விலகியிருப்பவர்களுக்காகச் செபிப்போம் எனவும், நம்செபங்கள் மற்றும், நற்செய்திக்குச் சான்றுபகர்வதன் வழியாக, கிறிஸ்தவ வாழ்வின் அழகை, அவர்கள் மீண்டும் கண்டுகொள்வார்களாக எனவும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி



அருட்திரு
**அன்ரன் ராஜநாயகம்**

ஊரின் உயர்ச்சிக்கு
உழைத்த உயர்ந்த உள்ளம்
கொண்ட உங்களை
உயர்வோடு நினைத்து
வாழும் உம்மால் உயர்ந்தோர்

சென். யூட்
இளவாலை

என்றும் உன் நினைவுகள்
எம்மோடு வாழும்
அருட்பணியாளர் S.A.ஜோர்ஜ்

## 21ம் ஆண்டு நினைவு — 2ம் ஆண்டு நினைவு



**கபிரியேல் சூசை**
மண்ணில் : 14-05-1925
விண்ணில் : 03-04-1996



**சூசை யக்கோவா**
மண்ணில் : 01-04-1929
விண்ணில் : 10-07-2015

" நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்
இறைவா முடிவில்லாத ஒளி இவர்கள்
மேல் ஒளிர்வதாக "

சென். யூட்
இளவாலை

குடும்பத்தினர்

## விண்ணக இனிய வாழ்வின் 1ம் ஆண்டு நினைவு

மண்ணில்
05 • 03 • 1942



விண்ணில்
01 • 07 • 2016

AD60

*அமரர்*
*யேசுதாஸ் அருளானந்தம்*

" என்னில் விசுவாசம் கொள்பவனுக்கு வாழ்வு மாறுபடுகிறதே
அன்றி அழிக்கப்படுவதில்லை. இரக்கமுள்ள ஆண்டவரே !
நீர் எமக்களித்த தந்தைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.
அவரின் ஆன்மாவை உமது நித்திய அமைதியால் மகழ்ந்திருக்கச்
செய்தருளும்.

– ஆமென்–

சங்கையான் வீதி
நவாலி கிழக்கு
மானிப்பாய்

பிரிவால் நினைந்துருகும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 7ம் ஆண்டு நினைவு

பிறப்பு
03 • 03 • 1928



விண்ணில்
03 • 06 • 2010

*அமரர்*
*மாட்டீன் அருள் மா இராஜேந்திரன்*
( அருள் அங்கிள் )

AD58

" சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள் "
" அன்பின் இலக்கணமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் நற்குணங்களின் சிகரமாய்
எம் எல்லோருக்கும் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் அனபின் தெய்வமே நீங்கள்
எங்களை விட்டுப் பிரிந்து ஏழாண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு நீங்காது "

**உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

கொட்டாஞ்சேனை
கொழும்பு-13

புஸ்பம் மற்றும்
பிள்ளைகள்

### அம்மா உந்தன்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலபங்குத் தளங்களில் இருந்தும் மரியாயின் சேனைக் குழுமத்தினர், அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் எனப்பலரும் நிகழ்வுக்கு வருகை தந்து சிறப்பித்தனர்

மரியாயின் சேனையானது இலங்கையில் யாழ்ப்பாணத்திலேயே (பாண்டியன்தாழ்வு) முதன் முதலாக உருவாக்கப்பட்டது. என்பது பெருமைக்குரியதாகும். அதன் பெருமைக்குரிய மற்றொரு விடயமாக முதன் முதலாக மரியாயின் சேனையினரின் மேற்படி இறுவட்டு வெளி யிடப்பட்டுள்ளது. யாழ் மறைமாவட்ட மரியாயின்சேனையின் ஆன்மகுருவாகிய அருட்பணி ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகளின் முயற்சியினால் இவ் இறுவட்டுவெளியிடப்பட்டது. இதற்கு இசைசார்ந்த பணிகளை ஆற்றி வெளிக்கொணர்ந் தவர் அருட்பணிறெனால்ட் ஜோர்ஜ் அடிகளாவார். மரியாயின் சேனையின் வரலாறு, கொள்கைகள், ஊழியங்கள், சேனையில் சேர்வதற்கான அழைப்பு. சாட்சியங்கள் என பல்வேறு விடயப்பொருள்களும் கொண்டமைந்த 13 பாடல்களைக் கொண்டதாக இந்த இறுவட்டு அமையப் பெற்றுள்ளது.

பாடல்வரிகளைக் குருமுதல்வர் உட்பட அருட்தந்தையர்களும் பொதுநிலையினரும் எழுதியுள்ள னர். பாடல்களை ஈழத்துக்கலை ஞர்களும் அருட்தந்தையர்களும் பாடியுள்ளனர். இசை இயக்கத் தினை சி.சுதர்சன் மேற்கொண்டுள் ளார். இந்த இசை இறுவட் டினை மரியா யின் சேனை யின் தாபகராகிய அயர்லாந்தினை சேர்ந்த பிராங் டவ்ப், அவர்களுக் கும் இலங்கையிலேயே இதனை முதன் முதலாக ஸ்தாபகம் செய்த அருட்திரு அலெக்சாண்டர்இராஜ நாயகம் அவர்களுக்கும் நன்றி யோடு மரியாயின் சேனையினர் சமர்ப்பணம் செய்து வெளியீடு செய்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

இப்பாடல்கள் அவற் றின் பா.வரிகளாலும் இசை அமைப்பினாலும், குரல் வளத்தி னாலும் ஒலிப்பதிவின் நவீன நுட்பங்களினாலும் கலைத்துவம் மிக்க படைப்பாகப் பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. இதுமரியா யின் சேனையினருக்கு ஊக்க மாகவும், கேட்பவர்களுக்கு மரி யன்னையில் பக்தியும், சேனை யில் சேர்ந்து பணியாற்று வதற்கான தூண்டுகையும் தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 30ம் வருட நினைவு நாள்

பிறப்பு
06 - 05 - 1934



இறப்பு
20 - 07 - 1987

AD61

அமரர்
**மாசேல் அரசநாயகம்**
(புகையிரதப் பகுதிக் காப்பாளர்)

இரக்கத்தின் தேவனே இறைவா
இவ்வுலகில் இன்பமுடன் வாழ்ந்து
இடைநடுவே இல்லற வாழ்வை முடித்து
இற்றைக்கு முப்பது ஆண்டுகள் ஆனதே
பரிதவிக்க விட்டுச்சென்ற உம் உறவுகள்
பரந்து விரிந்து பாரினிலே வாழ்கின்றோம் – உம்
பரிந்துரையினாலும் பராமரிப்புக்கான ஆதரவுடனும் –தொடர்ந்தும்
பாரினில் இறுதிவரை பாதுகாப்பும் எமக்குக்கிடைக்க
இறைவனிடம் பரிந்து பேசும்
எம் உயிர் உறவு உள்ளவரை
உமக்காக என்றும் இறைவனிடம்
உருக்கமாக வேண்டுகின்றோம் .

*புகையிரதவீதி*
*மருசுவில்*

*இங்ஙனம்*
*குடும்பத்தினர்*

## 7ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு
21 - 10 - 1935



உதிர்வு
16 - 07 - 2010

AD57

**பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம்**

" மாற்ற முடியாத நியதி என்று
மண்விட்டுச் சென்றனையோ
ஏழு ஆண்டுகள் நீண்டாலும்
மறையாத உம் நினைவுகளோடு "

*இல : 07, அச்சக வீதி*
*யாழ்ப்பாணம்*

*மனைவி பிள்ளைகள்*
*மற்றும் குடும்பத்தினர்*

### வாழ்க்கையில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மறை மாவட்ட மறைக் கோட்ட இளையோர் மன்றத் தலைவர்களும் மறை மாவட்ட இளையோர் ஒன்றியக் கீதம் முழங்க கொடிகளை ஏற்றி விழாவை ஆரம்பித்தனர்.

தொடர்ந்து ஆசியுரை வழங்கிய யாழ். ஆயர் "வாழ்வின் வெற்றிக் கான உத்திகளை விளையாட்டு மைதானத்தில் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறி நல்லாசி வழங்கினார்.

தொடர்ந்து நடைபெற்ற துடுப்பாட்டத்தில் 1ம் இடத்தை உரும்பிராய் அணியும், 2ம் இடத்தை கரவெட்டி அணியும், கிளித்தட்டில் 1ம் இடத்தை முழங்காவில் அணியும், 2ம் இடத்தை புங்குடுதீவு அணியும் ஆண்களுக்கான கயிறு இழுத்த லில் 1ம் இடத்தை அச்சுவேலி அணியும் 2ம் இடத்தை குருநகர் அணியும் பெண் களுக்கான கயிறு இழுத்தலில் 1ம் இடத்தை சக்கோட்டை அணியும், 2ம் இடத்தை அச்சுவேலி அணியும் முறையே பெற்றுக் கொண்டனர்.

மாலை 6.00 மணி யளவில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி P.J.ஜெப ரட்ணம் அடிகளார் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.



இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து அவர்கள் யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை கடந்த 29.06.2017 அன்று யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்து வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் சமகால நிலைமை பற்றி ஆயரிடம் கேட்டறிந்தார்.



இழுவை மடித்தொழிலை முற்றிலும் தடைசெய்ய பாராளுமன்றத்தில் வரவிருக்கும் சட்டமூலத்திற்கு ஆட்சேபம் தெரிவித்து அதில் திருத்தங்களைக் கோரி குருநகர் கடல்தொழில் அபிவிருத்திச் சங்கத்தினால் ஊடக சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

## ஆன்மீக எழுச்சி.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய மறைக்கோட்டப் பங்குகளிலிருந்து 250 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

முன்னதாக வரவேற்பு நிகழ்வைத் தொடர்ந்து பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்பணி எயின்சிலி றொசான் அடிகள், யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன் அடிகள் ஆகியோர் இணைந்து திருப்பலி நிறைவேற்றினர்.

தூய யோசவ் வாஸ் இறையியல் கல்லூரிப் பதிவாளர் பெ.பிரான்சிஸ் தலைமையில் இடம்பெற்ற கருத்தமர்வில் தூய யோசவ் வாஸ் வழிநின்று எமது பணிகளை முன்னெடுப்போம் என்னும் கருப்பொருளில் அருட்பணி எல்மோ அருள்நேசன் அடிகள் கருத்துரை வழங்கினார். படக்காட்சி விளக்கங்களுடன் சிறப்பாக அமைந்திருந்தன.

யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத் தலைவர் கி.றொபேட் தலைமையில் கழக வருடாந்த செயற்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. தீவக, யாழ்ப்பாணம், கிளிநொச்சி-முல்லைத்தீவு, இளவாலை, பருத்தித்துறை மறைக் கோட்ட செயற்பாட்டறிக்கையைத் தொடர்ந்து மறை மாவட்ட பொது நிலையினர் கழகசெயலாளர் எஸ்.யேசுதாஸ் மாவட்ட செயற்பாட்டு அறிக்கையை சமர்ப்பித்தார். செயற்பாடுகள் சமய எல்லைக்குள் மட்டும் நிற்காது சமூக, சமகாலப் பிரச்சினைகளையும் தீர்க்க முனைப்புக் காட்டப்பட்டமைக் காக ஆயரால் பெரிதும் பாராட்டப்பட்டது

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சட்டத்தரணி புனிதநாயகம் குடும்பத்திலிருந்து தான் ஆன்மீகவிசுவாசம் ஆரம்பிக்கப்பட வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்கு இறைவழிகளையும், ஒழுக்கநெறிகளையும் புகட்டி முன்மாதிரியாக வாழவேண்டும். வழிபாட்டு நாள்களில் விசேட வகுப்புகளுக்குச் செல்வதைத் தவிர்த்து ஆலய வழிபாடுகளில் பங்கேற்பது கட்டுப்பாடான அமைதியும், அன்பும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கும் என்றார்.

வினாவிடைப் பரீட்சையில் வெற்றிபெற்ற கோட்டமட்ட, மாவட்ட மட்டமாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்த யாழ் ஆயர் பொது நிலையினரில் தகுதியுள்ளோர் நற்கருணைப் பணியாளர்களாக இறைபணியாற்ற முன்வர வேண்டும். அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களிடம் திருவிருந்தை வாங்கும் மனப்பக்குவத்தை அனைவரும் உருவாக்க வேண்டும். நீங்கள்தான் திருச்சபை ஏனெனில் துறவிகள் 2 வீதமும் பொதுநிலையினர் 9 சதவீதமும் உள்ளனர்.

உங்களுக்குத்தான் குடும்ப, சமூகப் பிரச்சினைகள் தெரியும். ஒதுங்கி வாழ்வதை விடுத்துபணியாற்றமுன்வர வேண்டும் உன்னுள் என்ன உருவாகின்றதோ அதுதான் கல்வி. கல்வியை வெளியில் தேடுவதற்குமுன் உன்னுள் வளர்த்துக் கொள். ஆடல் பாடல் மகிழ்வுடன் இருக்கவேண்டிய மாணவர் சமூகம் இன்று இலத்திரனியல் சாதன அடிமையாகி வருவது கவலைக்குரியது என்று தெரிவித்தார்.

இறுதியாக யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தினர் வழங்கிய தூய யோசவ்வாஸின் வாழ்வும் பணியும் என்றும் வில்லிசை இடம் பெற்றது. தூய யோசவ்வாஸ் ஆண்டினிலே உப்பாக ஒளியாக என்றும் மகுடவாக்கியத்துடன் இடம்பெற்ற இம் மாநாடு ஆன்மீக எழுச்சியையும் சமய, சமூகப் பிறர்ப்பணி தூண்டுகையையும் மக்களிடத்தில் விதைத்துள்ளது என்பதைத் துணிந்து கூறலாம்.


### கத்தோலிக்க அச்சகத்தில் மலிவு விலையில் வேதாகமம்

வேதாகம நூல், புதிய ஏற்பாடு (சிறியது, பெரியது) உட்பட வழிபாட்டு நூல்கள் திருப்பலி வாசக நூல்கள் என்பன மலிவு விலையில் புனித வளன் கத்தோலிக்க விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேதாகமம் - 550/= புதிய ஏற்பாடு (பெரியது) 300 /= (சிறியது) 175 /=.

இறையியல், உளவியல் நூல்களும் விற்பனைக்கு உண்டு




புலோப்பளை புதிய பங்குத்தந்தையாக அருட்பணி E. செபஸ்ரியன் அடிகளார் முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி A.V. சில்வெஸ்ரதாஸ் அடிகளாரிடமிருந்து குருமுதல்வர் முன்னிலையில் மேய்ப்புப்பணிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்றார்.


### பொன்விழாக் காணும் அருட்சகோதரனை வாழ்த்துகின்றோம்



மாரிஸ்ட் சபையைச் சேர்ந்த அருட்சகோதரன் M.A. ஈப்ரம் ஒப்ரிஸ் அவர்கள் தமது துறவற வாழ்வின் 50 ஆண்டுகளை 07.07.2017 அன்று கொண்டாடுகின்றார்.

அருட்சகோதரன் அவர்கள் கடந்த சில ஆண்டுகளாக யாழ். பத்திரிசியார் கல்லூரியில் பணியாற்றி வருகின்றார். அருட்சகோதரனின் பணிவாழ்வில் இறைவன் தொடர்ந்தும் அருள்பொழிய வேண்டி பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## கட்டைக்காடு புதிய பங்காக மலர்கின்றது



கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பங்கு கள் 02.07.2017 முதல் புதிய பங்காக மலர்கின்றது.

இப்புதிய கட்டைக்காட்டுப் பங்குத் திருச்சபையின் துணைப் பங்குகளாக வெற்றிலைக்கேணி, புல்லாவெளி, இயக்கச்சி, பூனைத்தொடுவாய் என்பன அமைகின்றன.

இப்புதிய பங்கின் முதல் பங்குத்தந்தையாக அருட்பணி அன்ரனி மைக் டொனால்ட் அடிகளார் நியமிக்கப்பட்டு பணிப்பொறுப்பேற்பதை படத்தில் காணலாம்.

யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை யின் பணிப்பின் பேரில் தாளையடிப் பங்கின் துணைப் பங்குகளாக இயங்கிய புதிய பங்கின் மேய்ப்புப் பணிசிறப்பாக வளர பங்கு மக்களையும் புதிய பங்குத்தந்தையையும் பாதுகாவலன் நெஞ்சார வாழ்த்தி மகிழ்கின்றது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.